சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

## தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

***Published by***

**RAJA PUBLICATIONS**
**10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.**
**Mobile : +91-9600535241**
**website : rajapublications.com**

19 பகுதி-3
Part -3

Scanned by TapScanner

# சஞ்சாரம் நாவல் காட்டும் வாழ்வியல் கூறுகள்

செ. யமுனா

ஆய்வியல் நிறைஞர் மாணவி (முழுநேரம்), தமிழ் உயராய்வுத் துறை

விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),

எளையாம்பாளையம், தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

இக்கால இலக்கியங்களில் காணப்படும் கருத்துக்கள் மனித வாழ்வை உயர்த்தும் வாழ்வியல் கருத்தக்களைக் கூறி, அவனை நல்வழியில் வாழ வழிச் செய்கிறது. மனிதப் பண்புகளும் வாழ்வியல் அறங்களும் மதிப்பிழந்து கொண்டிருக்கும் வேகம் நிறைந்த வாழ்க்கைச் சூழல், இன்றைய சமூகத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. மனிதப் பண்புகளைத் திரும்பிப் பார்க்கக் கூட நேரமற்ற நிகழ்வுகளால் மட்டுமே நகர்ந்துகொண்டிருக்கிறது இன்றைய சமூகம் இதனை நெறிப்படுத்த, மேம்பாடடையச் செய்ய தமிழ் இலக்கியங்களின் பங்கு இன்றியமையாததாகும். இக்கால இலக்கியமான சஞ்சாரம் நாவலில் இடம்பெறும் வாழ்வியல் கருத்துக்களை ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

## சமூகம்

ஆற்றங்கரை நாகரீகம் தோன்றிய காலம்முதலே சமூகம் என்பது தோன்றிவிட்டது எனலாம். தனித்தனியாக மரங்களில், குகைகளில் பாதுகாப்பற்று வாழ்ந்த மனிதன் தன்னைப் பிற உயிர்களிடமிருந்து காத்துக்கொள்ள குழுவாக இணைந்து வெற்றிகண்டான். பத்து, இருபது குடும்பங்கள் நிர் பாயும் இடத்தில் தங்களுக்கான குடிலை அமைத்து அதற்கு ஒரு தலைவனையும் தேர்ந்தெடுத்து ஒரு சமூகத்தைத் தோற்றுவித்தான்.

“மனிதன் சேர்ந்து வாழத் தொடங்கிய நாளே சமுதாய அமைப்பிற்கு வித்திட்ட நாளாகும். கூட்டு வாழ்க்கையே சமுதாய வாழ்க்கை என்றாலும் பிழையாகாது.”[1]

என்ற கருத்திற்கு ஏற்றாற்போல் நாதஸ்வரக் கலைஞர்கள் ஒதியூரில் இணைந்து வாழ்ந்து வந்தனர். வேலை இல்லாத காரணத்தால் நாயனகாரர்கள் பலரும் ஒதியூரை விட்டு வெளியே சென்றுவிட்டனர். ஊரிலேயே வாழலாம் என்று ஆறு குடும்பங்கள் மட்டும் ஒதியூரில் வாழ்ந்துவந்தனர். இந்த ஆறு குடும்பங்கள் இணைந்து தங்களுக்கான சமூகத்தை உருவாக்கிக் கொண்டனர். பிற மக்களுடன் இணைந்து வாழவும் பழகிக் கொண்டனர்.

## பொருளாதாரம்

ஒரு மனிதனின் வாழ்க்கை நிலையைத் தீர்மானிப்பது அவனுடைய பொருளாதாரமே ஆகும். ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்விலும் பொருளே முக்கிய ஆதாரமாக உள்ளது.

தற்கால சூழலில் பொருளாதாரத்தில் மேலோங்கி இருப்பவர்களே சமுதாயத்தின் உயர்ந்தவர்களாக மதிக்கப்படுகிறார்கள். அந்த வகையில் ஆராய்ந்தால் நாதஸ்வரக் கலைஞர்களின் பொருளாதாரம் என்பது அவரவருடைய தகுதிக்கு ஏற்ப மாறுபட்டுத்தான் உள்ளது.

கோயில் திருவிழாக்கள், திருமண கச்சேரிகள், போன்றவற்றில் வாசிப்பவர்கள், குறைவான ஊதியமே பெருகின்றனர். சினிமா மற்றும் பெரிய மேடை கச்சேரிகளில் வாசிப்பவர்கள் அதிக அளவு ஊதியமும் சன்மானமும் பெறுகின்றனர். கலைஞர்களின் திறமை என்பது ஒன்றுதான். ஆனால், ஊதியம் என்பது அவரவர் இருக்கும் இடத்தைக் கொண்டு மாறுபடுகிறது.

## பண்டைய நிலை

பண்டைய கால மக்கள் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என ஐந்தாகப்

பிரித்து வாழ்ந்துவந்தனர். அவரவர்கள் இயற்கையில் கிடைக்கக் கூடிய காய், கனிகளையே உணவாகக் கொண்டனர். அன்றைய சூழலில் பணம் என்ற ஒன்று பயன்பாட்டில் இல்லை. மக்கள் வளரவளர அவர்களுடைய பொருளாதாரத்திலும் மாற்றம் ஏற்பட்டது. மக்கள் தம்மிடம் உள்ள பொருளைக் கொடுத்து வேறு பொருட்களை வாங்கினர்.

**"படகில் உப்பினை ஏற்றிச் சென்று விற்றனர். திரும்பி வருகையில் படகு நிறைய வெண்ணெல் நிரம்பியிருந்தது"[2]**

என்ற கூற்றின் வழி பண்டைய கால மக்கள் பண்டமாற்று முறையை மேற்கொண்டனர் என்பது புலனாகின்றது.

**தற்போதைய நிலை :** பண்டமாற்று முறை வெள்ளி மற்றும் தங்க நாணயங்களைக் கொடுத்து பொருட்களை வாங்குதல் என்ற நிலைகள் மாறி பணம் இருந்தால் எதனையும் வாங்கலாம் என்ற நிலை தோன்றியுள்ளது.

இன்றைய சூழலில் அன்றாட வாழ்வின் அடிப்படைக் கூறாக பணம் மாறிவிட்டது. ஒரு பொருளை வாங்க வேண்டும் என்றால் பணத்தைக் கொடுத்து அப்பொருளை வாங்கிச் செல்லலாம் என்ற காலகட்டத்தில் நாம் உள்ளோம்.

**"திரை கடலோடியும் திரவியம் தேடு"**

என்ற பழமொழிக்கு ஏற்ப பலரும் தன்சொந்த ஊரினை விடுத்து வேறு ஊர்களுக்கு சென்று பணிபுரிகின்றனர். அவ்வாறே, ரத்தினம், பக்கிரி மற்றும் அவர்களுடைய குழுவினர் எல்லோரும் சேர்ந்து ஒதியூரைச் சுற்றியுள்ள மூதூர், அரட்டானம், சோலையூர், காரிப்பட்டி எனப் பல ஊர்களுக்குச் சென்று வாசித்து வந்தனர். ஒள்ளூர் மட்டும் அல்லாது ஒருமுறை லண்டனுக்கும் சென்றுள்ளனர். ரத்தினத்தின் நண்பர் மூலம் இந்த வாய்ப்பு கிடைத்து, அவர்கள் லண்டன் சென்றனர். பணம் மட்டுமே இன்று மக்களின் வாழ்க்கை நிலையை தீர்மதனிக்கும் கருவியாக உள்ளது.

**தொழில்**

**"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை"**

என்ற குறளுக்கு ஏற்ப கரிசல் நில மக்கள் விவசாயத்தையே தலையாய தொழிலாகக் கொண்டிருந்தனர். இங்கு வாழ்ந்துவந்த நாதஸ்வர கலைஞர்களும் விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர். கச்சேரிகள் இல்லாத நேரங்களில் மக்களுடன் இணைந்து விவசாயத்தைச் செய்து வந்துள்ளனர்.

**உணவு :** ஒரு மனிதன் வாழ்வதற்காக உணவு உண்ண வேண்டும. உண்ணுவதற்காக வாழக்கூடாது என்று கூறுவர். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்றப் பழமொழிக்கு ஏற்ப அளவாக உண்ண வேண்டும்.

உணவின் தரம், ருசி உணவுப்பழக்கத்தைப் பொருத்தே அமைகின்றது. கரிசல் நில மக்கள் விளைவதை உண்டு வாழ்ந்து வந்தனர். அவரவர் பொருளாதார நிலைக்குத் தகுந்தார்போலும் உணவு முறைகள் அமைகின்றன. பக்கிரிக்கு முதலில் ஆசானாக இருந்தவர் வேணுகோபால்.

"வேணுகோபால் வெற்றிலை பிரியர். சதா வெற்றிலை போட்டு உதப்பிக் கொண்டே இருப்பார். அவருக்காக ஸ்பெஷலாக நெய்யில் வறுத்த சீவல் வேண்டும்" இதனைக் காணும்போது அவர் பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருந்திருக்கிறார் என்பது புலனாகிறது. அவரவர் பொருளாதார நிலைக்கு ஏற்பவும் உணவு பழக்கங்கள் அமைகின்றன.

**முடிவுரை:** அன்றாட செயல்பாடுகள், பழக்க வழக்கங்கள், உளவியல் தேவைகள், பொருள், பொழுது போக்குகள், வேலை போன்றவற்றையே வாழ்வியல் கூறுகள் என்கிறோம். சஞ்சாரம் நாவலில் எஸ். ராமகிருஷ்ணன் கூறும் வாழ்வியல் கூறுகளை இக்கட்டுரை மூலம் அறியலானோம்.

**சான்றெண் விளக்கம்**


1. சமுதாயமும் பண்பாடும் - பரம சிவானந்தம்
2. தமிழர் நாகரீகமும் பண்பாடும் - டாக்டர் அ. தட்சிணாமூர்த்தி
3. திருக்குறள் - புலியூர் கேசிகன்
4. சஞ்சாரம் - எஸ். ராமகிருஷ்ணன்


௸



Scanned by TapScanner